**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 282/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 6 |
| Name (திரு/திருமதி) | : ரம்யாராஜதுரை |
| Father's Name/ Husband's Name | : ராஜா |
| Village & Taluk | : நெகனூர் |
| Calling | : மருத்துவர் |
| Age | : 34 |

**<u>Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2025</u>**

(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது செஞ்சி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக பணி செய்து வருகிறேன். கடந்த 06.01.2017 ம் தேதியன்று செஞ்சி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்த போது மதியம் 12.30 மணிக்கு திருமதி. கோவிந்தம்மாள் க.பெ. நாராயணசாமி என்பவரை அவரது கணவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவரை விசாரணை செய்ததில் தன்னை இரண்டு தெரிந்த நபவர்கள் செறுப்பாலும் கையாலும் அன்றை தினம் காலை 06.30 மணிக்கு அவரது வயலில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் சுயநினைவுடன் இருந்தார். பின்வரும் காயங்கள் காணப்பட்டன. 1. இரண்டு காதுகளும் கேட்கும் திறன் குறைந்திருந்தது. வலது தோள் பட்டையில் தொடு வலி காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துமவனைக்கு பரிந்துரை செய்தேன். அவர் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அவரின் மருத்துவ ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அவருக்கு வலது காது சவ்வில் ஓட்டை காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் காயம் என காயச்சான்று வழங்கினேன். **மேற்படி விபத்து**

**பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் மேற்படி சாட்சியத்தின் சாட்சியம் முடிக்கப்பட்டது.,

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.